பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 11

சனிக்கிழமை
07 டிசெம்பர் 2024

கார்த்திகை 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055



## கோபா குழுவின் தலைவர் ஹர்ஷ?

கொழும்பு, டிசெ. 7
நாடாளுமன்றத்தில் கோபா குழுவின் தலைமைப்பதவியை எதிரணிக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், அந்தப் பதவிக்கு கலாநிதி ஹர்ஷ டி சில்வாவை ஐக்கிய மக்கள் சக்தி நியமிக்கலாம் எனத் தெரியவருகின்றது. எனினும், 11

# இடைக்கால பட்ஜெட் நேற்று நிறைவேற்றம்

கொழும்பு, டிசெம்பர் 7
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின், 2025ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களுக்கான இடைக் காலக் கணக்கறிக்கை சபையில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. 11



## இலங்கையை மேம்படுத்த அமெரிக்கா அவதானமாம்

கொழும்பு, டிசெ. 7
இலங்கையை மேம்படுத்துவதில் அமெரிக்கா மிகுந்த அக்கறையுடனும், அவதானத்துடனும் உள்ளதாக அமெரிக்காவின் தெற்காசிய மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் டொனால்ட் லூ தெரிவித்துள்ளார். 09

## அரசாங்கம் மக்களுக்கு பொய் உரைக்கின்றது!

### ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 7
சர்வதேச பிணைமுறியாளர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் இனி தம்மால் மாற்றங்களைச் செய்யமுடியாதுள்ளதாகவும் அரசாங்கம் மக்களுக்குப் பொய்யுரைக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினரான ஹர்ஷ டி 11

## மீன்பிடித்த நபர் சடலமாக மீட்பு

வவுனியா, டிசெ.7
வவுனியா பேராறு நீர்த்தேக்கத்தின் வான் பகுதியில் நேற்று மாலை மீன்பிடித்துக் கொண்டிருந்த நபர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். தரணிக்குளம் 11



## லொஹான் ரத்வத்தை மீண்டும் கைதானார்!

கொழும்பு, டிசெ. 7
பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை நேற்று மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார். 09

## சிறுவர்களை வைத்து இனி விளம்பரம் செய்யத் தடை!

கொழும்பு, டிசெ. 7
விளம்பர நடவடிக்கைகளுக்கு சிறுவர்களைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடகப் பிரதி அமைச்சர் மருத்துவர் ஹசங்க விஜேமுனி தெரிவித்துள்ளார்.
12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை விளம்பர நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதே இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளது என்றும், ஜனவரி மாதம் முதலாம் திகதிமுதல் இந்தத் தடை நடைமுறைக்கு வருகின்றது எனவும் 09

### மாவீரர் தின நினைவேந்தல்

## கொக்குவில் பகுதியில் இருவரிடம் விசாரணை!

யாழ்ப்பாணம், டிசெ. 7
கொக்குவில் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட மாவீரர்தின நினைவேந்தல் தொடர்பில் இருவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
கடந்த 21ஆம் திகதிமுதல் 27ஆம் திகதிவரை கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலயத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட நினை 11

## அரசியலமைப்புக் குழுவில் உள்ளீர்க்கப்பட்டார் சிறீதரன்

கொழும்பு, டிசெ. 7
இலங்கை நாடாளுமன்ற அரசியலமைப்புக் குழுவின் உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.
நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தவிர்ந்த ஏனைய 11 எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 25 பேரிலிருந்து அரசியலமைப்புக் குழுவின் பிரதிநிதி ஒருவரைத் தெரிவுசெய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.
இதன்போது, நாடாளு 11

### நாடாளுமன்றத் தேர்தல்

## யாழில் 354 வேட்பாளர்கள் கணக்கறிக்கை சமர்ப்பிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 7
யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இம்முறை போட்டியிட்ட 396 வேட்பாளர்களில் 354 வேட்பாளர்கள் தமது தேர்தல் கணக்கறிக்கையைத் தாக்கல் செய்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.
தேர்தல் கணக்கறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்ட அவகாசம் நேற்று நள்ளிரவு 11

## வங்காள விரிகுடாவில் இன்று காற்றுச்சுழற்சி!

### நள்ளிரவு காற்றழுத்தமாக மாறும்?

யாழ்ப்பாணம், டிசெ. 7
வங்காள விரிகுடாவில் அந்தமான் தீவுகளுக்குத் தெற்காக இன்று காலை புதிய காற்றுச் சுழற்சி உருவாகுவது உறுதியாகியுள்ளது. இந்தக் காற்றுச் சுழற்சி இன்று நள்ளிரவு அல்லது நாளை காற்றழுத்தமாக மாறும் என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் புவியியல் துறையின் தலை 11

## 30 மில்லிமீற்றர் மழைக்கே வெள்ளப் பேரிடர் வரலாம்!

யாழ்ப்பாணம், டிசெ. 7
வங்கக் கடலில் இன்று ஏற்படும் காற்றுச் சுழற்சியும், அதைத் தொடர்ந்து உருவாகும் காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாகவும் வடக்கில் மீண்டும் வெள்ளப் பேரிடர் அபாயம் ஏற்படும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்தக் காற்றழுத்த தாழ்வு நிலையால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதி 09

### முச்சந்தி முரளி


'பெங்கால் புயலால் வந்த பாதிப்பே இன்னும் போகேல அதுக்குள்ள இன்னொண்டா?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வட்டுவாகல் பாலத்தை புதிதாக நிர்மாணியுங்கள்

## ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு

**கொழும்பு, டிசெ. 7**

**முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலிலுள்ள வட்டுவாகல் பாலம் புதிதாக அமைக்கப்படவேண்டும். எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் அதனை உள்வாங்கவேண்டும் என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வில் கன்னியுரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தால் பலத்த அழிவுகள் ஏற்பட்டன. அதிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கு மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் வாழும் மக்கள் துன்பங்களை எதிர்கொண்டனர். பலத்த வெள்ள அனர்த்தம் காரணமாகப் பல வீதிகள் பாதிக்கப்பட்டன. பல ஆயிரக்கணக்கான வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்து பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. உயிரிழப்புகளும் ஏற்பட்டன. பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயல்நிலங்கள் வெள்ளத்தில் மூடி நெற்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டுள்ளன. மீனவர்கள் தொழிலுக்குச் செல்லமுடியாது பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இந்தப் பகுதி மக்களுக்கு நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் அத்துடன் மழைகாலங்களில் வட்டுவாகல் பாலத்தை மூடி கடல் நீர் பாய்வதால் பாலத்தால் பயணிக்கும் மக்கள் பெரிதும் சிரமங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

சுமார் 600 மீற்றர் நீளம் கொண்ட இந்தப் பாலத்தை.சுமார் 40,000 க்கும் மேற்பட்ட மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே இந்த வட்டுவாகல் பாலத்தைப் புதிதாக நிர்மாணிக்க, அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் உள்வாங்குங்கள் - என்றார். (ச-45-26)

# கோப் குழு எமக்கே கோபா குழு தரலாம்

## அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.7

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான கோப் குழுவின் தலைமைப்பதவி எதிரணிக்கு வழங்கப்படமாட்டாது. எனினும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவான கோபா குழுவின் தலைமைப்பதவியை எதிரணிக்கு வழங்கலாம் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றில் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா குழு) தலைமைப்பதவியை எதிரணிக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எனினும், கோப் குழுவின் தலைமைப்பதவி ஆளுங்கட்சிக்கு அவசியம். ஏனெனில் கடந்த ஆட்சியின்போது இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில்தான் முதல் காலப்பகுதியில் விசாரணை நடத்த வேண்டியுள்ளது- என்றார். (ச-44)

### ரஷ்ய இராணுவத்திலுள்ள

# யாழ்.இளைஞர்களை அரசு மீட்கவேண்டும்

## சிறீதரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, டிசெ. 7

முகவர்களால் ஏமாற்றப்பட்டு ரஷ்யஇராணுவத்தில்இணைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படும் வடக்கு இளைஞர்களை நாட்டுக்கு அழைத்துவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றம் நேற்றுக் கூடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து முகவர்களால் ஏமாற்றப்பட்ட நிலையில், ரஷ்யாவின் இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவை சேர்ந்தவர்களின் பெயர் விவரங்களையும் சிறீதரன் வெளியிட்டார்.

குறித்த இளைஞர்கள் அனுப்பிவைத்துள்ள படத்தையும் சபையில் காண்பித்து அவர்களை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இதுபற்றி வெளிவிவகார அமைச்சரிடம் தெரியப்படுத்துங்கள். அதுபற்றி கவனம் செலுத்தப்படும் - என்றார். (ச-44)

# ஊடக சுதந்திரம் ஒடுக்கப்படாது!

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 7


ஊடக சுதந்திரத்தை எந்த வகையிலும் தடுக்கவோ, மட்டுப்படுத்தவோ நாம் தயாரில்லை . அரசியல் மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பில் எந்தநேரத்திலும் அரசாங்கத்தை கேள்விக்குட்படுத்தவோ விமர்சிக்கவோ ஊடகங்களுக்கு எந்தத் தடையும் இல்லை என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடகங்களை வெளிநபர்களாக அன்றி பங்குதாரர்களாகத் தான் கருதுகிறோம். மக்கள் எதிர்பார்க்கும் புதிய அரசியல், சமூக மற்றும் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இணையுமாறு அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

அரசியல் மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பில் எந்த நேரத்திலும் அரசாங்கத்தை கேள்விக்குட்படுத்தவோ விமர்சிக்கவோ ஊடகங்களுக்கு எந்தத் தடையும் இல்லையென்றாலும் தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பாதகமான பொய்யான தகவல்களை வெளியிடவேண்டாம் - என்றார். (ச-இ)



# இணைய மோசடி; ஒருவர் கைது

கொழும்பு, டிசெ.7

இணையத்தளம் மூலம் பணமோசடியில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இணையத்தில் பணம் வருமானமாக ஈட்டலாம் எனக் கூறி சந்தேகநபர் 5 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை வடமேல் மாகாண கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# உயிர்நீத்தோரை நினைவேந்த படைமுகாம்களை அகற்றுங்கள்

## சத்தியலிங்கம் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம் , டிசெ. 7

போரில் உயிரிழந்தவர்கள் புதைக்கப்பட்ட இடங்களிலுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படவேண்டும். அப்பகுதிகள் மயானமாகப் பிரகடனப்படுத்தப்படவேண்டும். இராணுவமுகாம் தொடர்ந்து இருப்பது தேசிய நல்லிணக்கத்துக்குத் தடையாகவே அமையும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பா. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மாதம் நடைபெற்ற இறந்தவர்களை நினைவேந்தும் செயற்பாட்டைத் தடுக்காமல், போரில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூருவதற்கு இந்த அரசாங்கம் தடையேற்படுத்தாமல் இருந்தமைக்கு மக்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இது ஒரு சிறந்த நல்லெண்ண முயற்சி. அதேபோல போரில் உயிரிழந்த எங்களுடைய உறவுகள் புதைக்கப்பட்ட சில இடங்கள் இன்று இராணுவ முகாம்களாக உள்ளன. எனவே இத்தகைய இடங்களை மயானமாக பிரகடனப்படுத்தவேண்டும் - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்கால ஒதுக்கீடு 9,60,500 கோடி ரூபா

**கொழும்பு, டிசெ. 7**

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்துக்கு 2025 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான 4 மாத காலப் பகுதிக்கான கணக்கு வாக்குப்பதிவாக 9 இலட்சத்து 60 ஆயிரத்து 500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.**

இதில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுகளுக்கென 20,801 கோடியே 9,575,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த நிதியிலிருந்து ஜனாதிபதியின் செயல்முறை மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக 127 கோடியே 9,940,000 ரூபாவும் பிரதமர் அலுவலகத்துக்காக 37 கோடியே 80 இலட்சம் ரூபாவும் நிதி அமைச்சுக்காக 18,603 கோடியே 1,812,000 ரூபாவும் பாதுகாப்பு அமைச்சுக்காக 14,295கோடியே 50 இலட்சம் ரூபாவும் நீதி,தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்காக 1,727 கோடியே 3,160,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்காக 16,199 கோடியே 9,998,000 ரூபாவும் கல்வி, உயர்கல்வி அமைச்சுக்காக 9,200 கோடி ரூபாவும் பொது நிர்வாக, மாகாணசபைகள் அமைச்சுக்காக 17,047 கோடியே 6,415,000 ரூபாவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுக்காக 6,506 கோடியே 4,575,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று புத்தசாசன சமய கலாசார அமைச்சுக்கு 323கோடியே63 இலட்சம் ரூபாவும் வெளிநாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சுக்கு 592 கோடியே 7,350,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வர்த்தக வாணிப அமைச்சுக்கு 88 கோடியே 57 இலட்சம் ரூபாவும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 22,007கோடியே 50 இலட்சம் ரூபாவும் கமத்தொழில், கால்நடை, காணி, நீர்ப்பாசன அமைச்சுக்கு 6,736 கோடியே 10 இலட்சம் ரூபாவும் வலுசக்தி அமைச்சுக்கு 4,330கோடியே 550,000 ரூபாவும் நகர அபிவிருத்தி,நிர்மாணிப்பு வீடமைப்பு அமைச்சுக்கு 1,719கோடியே4,920,000 ரூபாவும் பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு அமைச்சுக்கு 365 கோடியே 20 இலட்சம் ரூபாவும் மிகுதி ஏனைய அமைச்சுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## விசேட சோதனைக்காக 2000 அலுவலர்கள்!

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில், விசேட சோதனை நடவடிக்கைகளுக்காக நாடளாவிய ரீதியில் 2 ஆயிரம் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. உணவகங்களிலுள்ள சமைத்த உணவுகளைப் பரிசோதிக்கும் பணியே பிரதானமாக இடம் பெறவுள்ளது.

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் உணவு மற்றும் பானங்களின் தூய்மை தொடர்பில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக பல தொற்று நோய்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)


## தவறான முடிவெடுத்து குடும்பப்பெண் சாவு

*மகன் கைது*

கிளிநொச்சி, டிசெ.7

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னை நீராவி நாதன்திட்டக்கிராமத்தில் குடும்பப்பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். 35 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் அவருடைய 14 வயது மகனைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி மேற்கொண்டார் (ரி-113)



## பிளாஸ்ரிக் பொருள்கள் பாவனைக்குத் தீங்கானவை

*பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டு*

பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் தண்ணீர்ப் போத்தல்கள் மற்றும் உணவு கொண்டு செல்லும் பெட்டிகளில் பெரும்பாலானவை மனிதப் பாவனைக்கு உகந்தவை அல்ல என பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. வீதியோரங்களில் விற்பனை செய்யப்படும் பல பிளாஸ்ரிக் மற்றும் உலோக பொருள்கள் இரசாயனங்கள் கலந்து தயாரிக்கப்பட்டவை. இந்தப் பொருள்களை பாவிப்பதனால், மலட்டுத்தன்மை, பிறப்புறுப்புகளில் பிரச்சினை, புற்றுநோய் போன்ற பாதிப்புகள் ஏற்படலாம். எனவே பிளாஸ்ரிக் பொருள்களை கொள்வனவு செய்யும் போது முட்கரண்டி அடையாளமிடப்பட்ட அல்லது 5 இலக்கமிடப்பட்ட பொருள்களைக் கொள்வனவு செய்யுமாறு பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது. (ச-22,6)



## இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட 14 இராமேஸ்வர மீனவர்களையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உத்தர விட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து தலைமன்னார் கடற்பரப்பில் கடந்த புதன்கிழமை மீன்பிடியில் ஈடுபட்ட வேளை இலங்கைக் கடற்படையினரால் அவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர். (ச-22-56-60)




களையளைப் பிடுங்கினால் பயிர் மட்டுமில்லை, கட்சியளும் வளரும். அதுக்கு நல்ல உதாரணம் ஜே.வி.பி. தான். அந்தக்கட்சி தங்கட பக்கம் இருந்து கெட்டபேரை வாங்கித்தந்த ஆக்களையெல்லாம் ஈவிரக்கம் பாக்காமல் கட்சியை விட்டு நீக்கி, அவைக்கு மேல நடவடிக்கை எடுத்ததாலதான் அந்தக் கட்சியை நம்பி வாக்குப் போடலாம் எண்டு சனங்களும் மனம் மாறினவை. இப்ப அதே ரூட்டில போறதுக்கு மற்றக் கட்சியளும் முயற்சிக்கினம்,. அதில முக்கியமானது மொட்டுக்கட்சி. அந்தக் கட்சிக்கு சனத்திட்ட ஒருகாலத்தில எந்தளவு செல்வாக்கு இருந்ததெண்டும், பிறகு அது எப்பிடி தலைகீழா மாறினதெண்டும் எல்லாருக்கும் வடிவாத் தெரியும். அதால அவையும் ஜே.வி.பி.யின்ர பாதையில போறதுக்கு முடிவெடுத்திட்டினம்.

அப்பிடி மொட்டுக்கட்சி எடுத்த முடிவில ஒண்டுதான், வடக்கில இருக்கிற தங்கட கட்சியின்ர அமைப்பை மாத்தியமைக்கிறது. ஏற்கனவே அந்தக்கட்சியில் இருக்கிற பெரும்பாலான ஆக்களைப்பற்றி சனத்திட்ட நல்ல அபிப்பிராயம் இல்லை. ஆள் எண்ணிக்கைக்குத்தான் அவையைக் கட்சியில சேர்த்தவை. அதால அவையின்ர பின்னணி என்ன, கொள்கை என்ன, கோதாரி என்ன எண்டு ஒண்டும் பாக்கேலை. அதோட இந்தமுறை பார்லிமெண்ட் எலக்சனிலையும் அப்பிடியான ஆக்களுக்கு போட்டியிடுறதுக்கு இடமும் குடுத்தவை. எலக்சன் முடிஞ்ச பிறகுதான் இப்பிடி ஊரை ஏமாத்தி உலையில போட்டவையையெல்லாம் கட்சியை விட்டு துரத்திற முடிவுக்கு வந்திருக்கினம். இந்த விசயம் தெரியாமல் அந்தக் கட்சியில இருக்கிறவை பழையபடி ஏமாத்திக் காசு வாங்கிறது, கட்டப்பஞ்சாயத்து செய்யிறது எண்டு விளையாட்டுக் காட்டியிருக்கினம். இதெல்லாம் இப்ப அந்தக் கட்சியின்ர யாழ்ப்பாணக் கிளைக்குப் பொறுப்பா இருக்கிறவருக்கு முறைப்பாடா வர, அவரும் நேரடியாப் பாதிக்கப்பட்டவையின்ர வீட்டை போயிருக்கிறார். அந்தக் கட்சியில வேட்பாளரா இருந்த ஒருத்தர் வெளிநாட்டில் இருக்கிற ஒராளுக்கு வேர்க் பெர்மிற் வாங்கித்தாறன் எண்டு சொல்லி 8 லட்சம் ரூபாவை வாங்கிக்கொண்டு கம்பி நீட்டியிருந்தவர். ஆளுக்கு போன் அடிச்சாலும் அவர் எடுக்கிறதே இல்லை. அதால கட்சிப்பொறுப்பாளர் வந்து விசாரிச்சதை வீட்டுக்காரர் ' காசு விசயமா ஒராள் வந்து விசாரிச்சுப் போட்டுப் போறார். பாக்கிறதுக்கு சி.ஐ.டி. மாதிரி இருக்கிறார்' எண்டு காசை வாங்கிப்போட்டு கம்பிநீட்டினவருக்கு மெசெஜ் போட்டிருக்கினம்.

சி.ஐ.டி. வந்தது எண்டதும் காசை வாங்கினவர் துடிச்சுப் பதைச்சுக்கொண்டு ஓடி வந்து காசையும் குடுத்திருக்கிறார். அதுக்குப் பிறகுதான் வந்திட்டுப் போனது சி.ஐ.டி. இல்லை, தங்கட கட்சிப் பொறுப்பாளர் எண்ட விசயம் தெரிய வந்திருக்குது. 'எல்லாரையும் தட்டிச் சுத்துற நானே இப்பிடி ஏமாந்திட்டனே' எண்ட அழலில பொலிஸில போய் 'எங்கட கட்சிப்பொறுப்பாளர் சி.ஐ.டி. எண்டு சொல்லி ஆக்களை வெருட்டுறார்' எண்டொரு முறைப்பாடு போட, பொலிஸும் கட்சிப் பொறுப்பாளரைக் கூப்பிட்டு விசாரிச்சிருக்கு. காசைக் குடுத்து ஏமாந்தவையும் பொலிஸ் ஸ்ரேசனுக்கு வந்து நடந்ததைச் சொல்லியிருக்கினம். அப்பதான் பொலிஸுக்கே உண்மை தெரிய வந்ததாம். அதுக்குப் பிறகு முறைப்பாடு போட்ட அந்த ஏமாத்துக்காரரைக் கூப்பிட்டு இப்பிடி பொய் முறைப்பாடு போட்டால் உள்ளுக்க தள்ளிப் போடுவம் எண்டு வெருட்டி அனுப்பியிருக்கினம். எல்லாம் கைமீறிப்போன பிறகு கட்சிக்காரர்களை நிப்பாட்டுறதை விட, முதலே கட்சியில சேருற ஆள் நல்லவரா எண்டு பார்த்து எடுத்திருந்தால் இந்தச் சோலி எல்லாம் வந்திருக்காதே?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் மாண்புறு சத்திரசிகிச்சை நிபுணர்

இ.சர்வேஸ்வரா
முன்னாள் உதவிப் பதிவாளர்
மருத்துவ பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பேராசிரியர் சு.ரவிராஜ் ஓய்வில்லாத பெரும்காற்று



இலங்கை முழுவதும் நன்கு அறியப்பட்ட வட மாகாணத்தின் முதன்மை சத்திரசிகிச்சை நிபுணரான பேராசிரியர் மருத்துவக் கலாநிதி சுப்பிரமணியம் ரவிராஜ் தனது மருத்துவ மற்றும் கற்பித்தல் பணியில் இருந்து உத்தியோகபூர்வமாக ஓய்வுபெறுகின்றார். போர் நெருக்கடிகள் சூழ்ந்திருந்த காலப்பகுதியில் எமது தாயகப் பிரதேசத்தில் தங்கிநின்று மக்களுக்கு சேவையாற்றிய மகத்தான மருத்துவர்களுள் இவர் முதன்மையானவர். மருத்துவத்துறை சார்ந்து அவரது வகிபாகம் பன்மைத்துவ பரிமாணம்மிக்கது. சத்திரசிகிச்சை நிபுணர், பேராசிரியர், போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், இலங்கை மருத்துவ பேரவையின் செயற்குழு உறுப்பினர், மருத்துவக் கற்கைகளுக்கான உயர்பட்டப்படிப்புகள் நிறுவனத்தின் சபை உறுப்பினர், சத்திரசிகிச்சைத் துறைசார் உயர் பரீட்சைகளின் பரீட்சகர், மருத்துவபீடத்தின் பீடாதிபதி என அவரது வாண்மைத்துவ வகிபாகங்களும் தலைமைத்துவ வகிபாகங்களும் நீண்ட வரிசையைக் கொண்டன. தமிழர்கள் மத்தியில் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்த மருத்துவ நிபுணர்கள் பலர் வரலாற்றில் இடம்பிடித்துள்ளனர். அவர்கள் எல்லோர் மத்தியிலும் சத்திரசிகிச்சைப் பேராசிரியர் ரவிராஜ் தனித்த அடையாளம் கொண்டவராக திகழ்கின்றார். மருத்துவத்துறை சார்ந்த சிகிச்சையியல் கற்பித்தல் மற்றும் நிர்வாகம் என மூன்று தளங்களில் தனது தடத்தை ஆழமாக பதித்திருக்கின்றார் பேராசிரியர். அதற்கும் அப்பால் அவரது இலகுவாக சமூகமயமாகும் தனித்துவக்குணம் அவரை இன்னும் வேறுபடுத்திக்காட்டும் பண்புமிக்கது. பல சமூக மட்ட அமைப்புகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு எவர்க்கும் எளியனாகவும் அணுகுவதற்கு இலகுவான மனிதராகவும் அவர் இருப்பது அவருக்கேயுரித்தான தனி அடையாளம். இத்தகைய பன்முகப்பட்ட ஆளுமைகளைக் கொண்ட பேராசிரியர் ரவிராஜ் பல்கலைக்கழக கற்பித்தல் பணியில் இருந்தும் அரசமருத்துவமனை சத்திரசிகிச்சை பணியில் இருந்தும் வயதுமூப்புக் காரணமாக ஓய்வு பெறுகின்றார்.

இருப்பினும் அவரது ஆற்றல்அறிவு அனுபவம் காரணமாக அவர் இன்னும் பல்லாண்டுகள் மேற்குறிப்பிட்ட இந்தத் துறைகளுடன் வழமைபோல் மிகவும் நெருங்கிச் செயற்படுபவராகவே திகழ்வார். அவரது வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள் உயர்மட்டத் தொடர்புகள் என்பன நமது சமூகத்தின் வல்லமைவிருத்திக்கு தொடர்ந்தும் தேவைப்படுபனவாகவேயிருக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. பேராசிரியர் அவர்கள் அண்மையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் நியமனம் பெற்றிருக்கின்றார். இது ஓய்வுக்குப் பின்னரும் பல்கலைக்கழக கல்விப் புலம் சார்ந்து அவரது தாக்கத்தை வலுப்படுத்துவதாக உள்ளது.

பேராசிரியர் ரவிராஜ் 1959 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி சுன்னாகத்தில் நன்கு அறியப்பட்ட மருத்துவர் சுப்பிரமணியம் மற்றும் இரட்ணமணி தம்பதிகளின் ஏக புதல்வனாக பிறந்தார். அவருடன் கூடவே பிறந்தவர் ஒரு சகோதரி திருமதி லலிதா யோகவிநாயகம். அவர் சிங்கப்பூரில் பற் சிகிச்சை நிபுணராக கடமையாற்றுகின்றார். அவரது கணவரும் ஒரு மருத்துவ நிபுணர். தந்தையாரின் பணிநிமிர்த்தம் அநுராதபுரத்தில் முன்பள்ளிக் கல்வியைப் பெற்றுக்கொண்ட பேராசிரியர் பின்னர் தமது பூர்விக இடத்துக்குத் திரும்பி உடுவில் மகளிர் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றார். அதன் பின்னர் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடைநிலைக் கல்வி மற்றும் உயர்தரத்தைக் கற்று அங்கிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குத் தெரிவானார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் இரண்டாவது அணி மாணவராக 1979 இல் இணைந்து கொண்ட அவர் 2015 ஆம் ஆண்டு அதே பீடம் பிரசவித்த மாணவன் ஒருவர் அப் பீடத்தின் பீடாதிபதியாகும் வரலாற்றுச் சந்தர்ப்பத்தின் வழி மருத்துவபீடத்தின் பீடாதிபதியாகினார். மருத்துவபீடத்தில் கல்வி கற்கும் காலத்தில் மிகவும் துடிப்புள்ளவராகவும் ஆற்றல் உள்ளவராகவும் விளங்கிய பேராசிரியர், பேராசிரியர்களான கருணைநாதன், வேற்பிள்ளை மற்றும் சிறிஸ்கந்தவர்மன் ஆகியோரிடம் சத்திரசிகிச்சைக் கல்வியையும் மருத்துவ நிபுணர்கள் திருமதி எஸ்.கணேசமூர்த்தி, சிறிகரன், நாகேஸ்வரன் மற்றும் ரஞ்ச தயாளன் ஆகியோரிடம் சிகிச்சை மருத்துவவியல் கற்கைகளையும் பயின்றார். பேராசிரியர்கள் சிவசூரியா மற்றும் தயாளசேகரன் ஆகியோரிடம் மகப்பேற்று பெண்நோயியல் கல்வியையும் பேராசிரியர் இராமதாஸ் மற்றும் மருத்துவர் வாமதேவன் ஆகியோரிடம் குழந்தை மருத்துவக் கல்வியையும் கற்றார். 1984 ஆம் ஆண்டு மருத்துவப் பட்டப்படிப்பை பூர்த்திசெய்த பேராசிரியர் அவர்கள் 1985ஆம் ஆண்டு யாழ். போதனா மருத்துவமனையில் தனது மருத்துவ உள்ளகப் பயிற்சிக்காக இணைகின்றார். இதுவே அவரது வாழ்வின் திருப்புமுனையான காலம். அங்கு சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் மற்றும் பொது மருத்துவநிபுணர் ஜேம்ஸ் ஆகியோரிடம் பயிற்சி பெற்றார்.

அரசாங்க மருத்துவராக இணைந்தபின்னர் பேராசிரியர் கருணைநாதன் மருத்துவ நிபுணர்கள் கணேசரட்ணம் பொன்னம்பலம் மற்றும் சேவியர் ஆகியோரின் கீழ் சிரேஷ்ட விடுதிப் பொறுப்பு மருத்துவராக பணியாற்றினார். சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலத்திடம் அவர் பெற்றுக்கொண்ட பயிற்சியும் வழிகாட்டலும் சத்திரசிகிச்சையியல் துறைசார்ந்த ஆர்வத்தை தோற்றுவிக்க அந்தத்துறை சார்ந்த பட்டப்படிப்பைத் தொடரும் முயற்சியில் வெற்றிபெற்ற பேராசிரியர் ரவிராஜ் யாழ்ப்பாணத்தின் முதலாவது சத்திரசிகிச்சையியல் பதிவாளர் எனும் தகைமையைப் பெற்றுக்கொண்டார். அந்தத் தகைமையுடன் திறன் வாய்ந்த சத்திரசிகிச்சை நிபுணர் கணேசரட்ணத்திடம் தனது சத்திரசிகிச்சைப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டார். தனது வெளிநாட்டுப் பயிற்சியை அவுஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூரில் நிறைவுசெய்த அவர் அதன் பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சத்திரசிகிச்சை நிபுணராகக் கடமையாற்றத் தொடங்கி இன்றுடன் அப் பணி நிறைவுறுகின்றது. போர் நெருக்கடிகள் மிகுந்த காலப்பகுதியில் பொருளாதாரத் தடைகள், மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை, மருந்துகளுக்கான கட்டுப்பாடு மற்றும் தட்டுப்பாடு, நிர்வாக ரீதியான இரட்டைச் சூழல், தொலைத்தொடர்பு வசதிகள் இன்மை எனப் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் நின்று தனது அயராத சேவையை வடக்கு மக்களுக்கு வழங்கினார். அதிலும் தகுதிவாய்ந்த மருத்துவ நிர்வாகிகளுக்கு பற்றாக்குறையான அக்காலகட்டத்தில் 2005 தொடக்கம் 2012 வரை போதனா மருத்துவமனையின் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

அதன் பின்னர் 2012 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் சத்திரசிகிச்சையியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராக இணைந்து கொண்ட அவர் பின்னர் துறைத் தலைவர் மற்றும் இரண்டு தடவைகள் மருத்துவ பீடாதிபதி எனும் தகைமைகளைப் பெற்றார். நிறைவில் சத்திரசிகிச்சைத் துறையின் இருக்கைப் பேராசிரியராக நியமனம் பெற்றார்.

அவரது தலைமைத்துவம் மருத்துவபீடத்தின் மற்றுமொரு மறுமலர்ச்சிக் காலமாக அமைந்தது. பீடம் தன்னை பௌதிகவள ரீதியாக மேம்படுத்திக்கொண்டது. குறிப்பாக தற்போது நகரின் மத்தியில் நிமிர்ந்து நிற்கும் மருத்துவபீடத்தின் எட்டுமாடிக் கட்டடத்தில் பேராசிரியர் அர்ப்பணிப்பு அதிகம் நிறைந்திருக்கின்றது என்ற வரலாற்றை உண்மையுடன் அணுகும் பலரும் அறிவர்.

1988 ஆம் ஆண்டு கைதடி வாழ்பெருமகனும் யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபருமான முத்துக்குமாரசாமி தம்பதிகளின் புதல்வி அனுசியாவைத் திருமணம் செய்துகொண்ட பேராசிரியருக்கு குகப்பிரியன் மற்றும் பிரதாஜினி என இரு பிள்ளைகள் வாய்த்தனர். பிள்ளைகள் இருவரும் இன்று மருத்துவர்களாகி மகன் அவுஸ்திரேலியாவிலும் மகள் இங்கிலாந்திலும் உயர்நிலையிலுள்ளனர். விரைவில் தாயகம் மீளுவர். பேராசிரியர் உயர்வுகள் கண்டு நிமிர்ந்த போது நினையாத பொழுதொன்றில் அவரின் எல்லாமாகவிருந்த மனைவியின் இழப்பு பெரும்தாக்கத்தை கொடுத்தது. இருந்தும் நெஞ்சுரத்துடன் மீண்டு தனக்கே உரித்தான வகையில் தன் சமூகக் கடமைகளை நிறைவேற்றி வருகின்றார். ஓய்வுக்குப் பின்னரும் ஓயாது சமூக நன்மை கருதி உழைக்கும் மனிதராக அவர் என்றும் திகழ்வார். வடக்கு மருத்துவத் துறையில் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவிராஜ் என்றும் தவிர்க்க முடியாத ஆளுமையாக காலத்தால் நினைவுகொள்ளப்படுவார் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# சாமி வரம் கொடுத்தும்....!

நவம்பர் மாதம் 18ஆம் திகதி ஜனாதிபதி அநுர தலைமையிலான அமைச்சரவை பொறுப்பேற்றகையுடன், 14 நாள்களுக்குள் வடமராட்சி கற்கோவளம் தனியார் காணிகளில் உள்ள படை முகாமிலிருந்து இராணுவம் முற்றாக வெளியேறவேண்டும் என்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, 14 நாள்களைக் கடந்த பின்னரும் இன்னமும் நிறைவேறியதாகவில்லை. மாற்றம் நிகழ்வதாக எதிர்பார்த்துக் காத்திருந்த தமிழர்களுக்கு ஏமாற்றம் மட்டுமே எஞ்சியிருக்கின்றது.

தனியார் காணிகளை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள கற்கோவளம் படை முகாமை முற்றாக அபகரிப்பதற்குக் கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட எத்தனங்கள் ஏராளம். ஒவ்வொரு முறையும் நிலஅளவைப் பணிகள் முன்னெடுக்க முயற்சிக்கும் போதும் அந்த முயற்சிகள் பொதுமக்களினதும், அரசியல்வாதிகளினதும் கடுமையான எதிர்ப்பால் தடுக்கப்பட்டே வந்தன. எனவே, பெரும் அந்தரப் பிழைப்புக்குள் இருந்த அந்தக் காணித் துண்டுகளுக்கு இனியாவது விடுதலை கிடைத்துவிடும் என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டதெல்லாம், 'சாமி வரம்கொடுத்தாலும் பூசாரி இடம்கொடாத கதையாக' மாறியிருக்கின்றது.

நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியிலும், நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் என்ற வகையிலும் இந்த விடயத்துக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவே பொறுப்புடையவர். ஆனால், அவர் முயன்றாலும் இராணுவம் மனம் வைக்கவில்லையென்றால் எதுவும் சாத்தியமில்லை என்பதையே கற்கோவள படை முகாம் விவகாரம் காண்பிக்கின்றது. காணி விடுவிப்புகளில், ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் ஆர்வம் காட்டினாலும், இராணுவம் இணங்காவிட்டால் ஒன்றும் சாத்தியமாகாது என்பது பட்டவர்த்தனமாவது இதுவொன்றும் முதல்முறையல்ல. கடந்தகால அரசாங்கங்களின் ஆட்சியிலும் இந்தப் போக்குத் தாராளமாகவே இருந்திருக்கின்றது. அதன் தொடர்ச்சியே இது.

ஜனாதிபதி அநுர அரசாங்கத்தால் பலாலியில் ஒரு பாதை விடுவிக்கப்பட்டதுதான். ஆனால், அதுவும் பகுதியளவான விடுவிப்பாகவே அமைந்தது. அத்துடன், மடுமாதா பேரணி உள்ளிட்ட சில விடயங்களுக்காகத் திறக்கப்பட்ட பாதையே விடுவிக்கப்பட்டிருந்தது. அதைத் தவிர வேறெந்த அதிசயங்களையும் வடக்கில் தேசிய மக்கள் சக்தி நிகழ்த்தவில்லை என்பதே உண்மை. எனவே, யதார்த்தம் இவ்வாறிருக்கையில், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற விடயங்களில் தேவையற்ற எதிர்பார்ப்புகளை மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏற்படுத்தக்கூடாது. அவ்வாறு ஏற்படுத்தினால்-வாக்குறுதி வழங்கினால் அதை நிறைவேற்றக் கூடிய திராணியும் இயலுமையும் இருக்கவேண்டும்.

போலி வாக்குறுதிகளால் தமிழர்கள் ஏமாற்றப்படுவது இதுவொன்றும் முதல்முறையல்ல. 'மைத்திரி ரணில்' அரசாங்கத்தில் தமிழர் தாயகத்தில் போலி வாக்குறுதிகளே போதும் போதும் என்கின்ற அளவுக்கு நிறைந்து வழிந்தன. முன்னாள் ஜனாதிபதி ரணிலின் ஆட்சிக்காலத்தில் அது தொடர்கதையாகியது. ஆதலால், இனத்துவேசம், இனவாதம் ஆகியவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க விளையும் அநுர அரசாங்கம், போலி வாக்குறுதிகளை வழங்கிக் கவர்ந்திழுக்கும் 'மோசடி அரசியல் கலாசாரத்துக்கும்' முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அந்த மாற்றத்தை தேசிய மக்கள் சக்தியினர் தம்மிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். மாற்றம் என்பது அனைவருக்கும் -அனைத்துக்கும் பொதுவானது தானே.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

ஆபத்துகளை எதிர்கொள்ளாமல், உயர்ந்த விடயங்களை ஒருபோதும் அடைய முடியாது.

– நிக்கோலோ மச்சியாவெல்லி –




# முதற்தடவையாக நாட்டில் பெண் எம்.பி. க்களின் ஒன்றியம்



கொழும்பு, டிசெ. 7

பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை கூடியது.

இதன்போது, ஒன்றியத்தின் தலைவராக பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவுசெய்யப்பட்டார்.

பிரதி இணைத் தலைவர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்திரானி பண்டார கிரிஎல்லே மற்றும் சமன்மலி குணசிங்க ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் ஒன்றியத்தால் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்ய உபகுழுவொன்று அமைக்கப்பட்டது. (ச-25)

## தேர்தல் 'பட்ஜெட்' காலக்கெடு நிறைவு

யாழ்ப்பாணம்,டிசெ.7

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளை வழங்குவதற்கான காலக்கெடு நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. தேர்தலில் போட்டியிட்ட 8361 வேட்பாளர்களில் 1985 பேர் மட்டுமே அந்த அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளதாக (நேற்றுமுன்தினம் நள்ளிரவு வரை) ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.ஏ.ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

690 அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களில் இதுவரை 106 அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் மட்டுமே உரிய சமர்ப்பிப்புகளைச் செய்துள்ளது. இந்த நிலையில் குறித்த காலத்துக்கு உரிய அறிக்கைகளை வழங்காத நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## டெங்கு உயர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 7

நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையில், டிசெம்பர் மாதம் ஆரம்பித்து முதல் வாரத்தில் 521 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இவ்வருடம் ஆரம்பித்த காலப்பகுதி வரை 46,048 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## துப்பாக்கிச்சூடு மூதாட்டி பலி!

கொழும்பு, டிசெ. 7

அநுராதபுரம், பதவிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகஹவெவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பதவிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். 73 வயதுடைய வயோதிபப் பெண்ணே உயிரிழந்துள்ளார். இந்த துப்பாக்கிச் சூட்டுக்காக ரி - 56 துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ச-இ)

## சதொசவில் பெரும் வரிசை

அரச அங்காடியான சதொச கிளைகளில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதல் நுகர்வோரின் வரிசைகள் அதிகரித்துள்ளன. சதொச கிளைகளில் மானிய விலைகளில் நாட்டு அரிசி மற்றும் தேங்காய்கள் விற்பனை செய்யப்படுவதால் மக்களின் வரிசைகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஒரு மாதகாலமாக நாட்டில் அரிசிக்கும் தேங்காய்க்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

நாளை 08.12.2024
ஞாயிற்றுக்கிழமை - கார்த்திகை - 23
சுபநேரம் : 09.17 - 10.47
ராகுகாலம் : 04.47 - 06.17

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு**

பப்படம் தயாரிக்கும் மெசின் (2) உம் ஈர அரிசி அரைக்கும் (டிஸ்) மோட்டர் உடன் விற்பனைக்குண்டு. (cs.56835) (N-1)

**076 803 5175**

# மரக்கறி, மீன்கள் விலை உயர்வு

முல்லைத்தீவு,டிசெ.7

தற்போது மரக்கறி, மீன் என்பனவற்றின் விலை சடுதியாக அதிகரித்துவருவதோடு அவற்றுக்கு தட்டுப்பாடும் நிலவி வருகிறது. மீன்களின் விலை கிலோ 1200 ரூபாவைத் தாண்டியுள்ளது.

அதேவேளை கடும் மழை காரணமாக மரக்கறிச் செய்கைகள் பாதிக்கப்பட்டமையால் மரக்கறிச் செய்கையிலும் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் மரக்கறி விலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-33-500)



# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## பிரதேசசபை கடைகள் வாடகைக்கு வழங்குதல் தொடர்பான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட மருதனார்மடம் சந்தைப்பகுதியில் உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்ட நிதியில் (LDSP) அமைக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடைகளினை 13.01.2025ம் திகதி முதல் வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 09.12.2024 – 23.12.2024 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 24.12.2024 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 24.12.2024 செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்

| விபரம் | பரப்பளவு (சதுர அடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | மாத வாடகை | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு மீளளிக்கக் கூடியது |
|---|---|---|---|---|---|
| **மேற்தளம்** | | | | | |
| கடை இல - 01 | 308 | 2,040,000.00 | 8,500.00 | 2,000.00 | 41,000.00 |
| கடை இல - 02 | 308 | 2,040,000.00 | 8,500.00 | 2,000.00 | 41,000.00 |
| கடை இல - 03 | 308 | 2,040,000.00 | 8,500.00 | 2,000.00 | 41,000.00 |
| கடை இல - 04 | 308 | 2,040,000.00 | 8,500.00 | 2,000.00 | 41,000.00 |
| கடை இல - 05 | 308 | 2,040,000.00 | 8,500.00 | 2,000.00 | 41,000.00 |
| கடை இல - 06 | 308 | 2,040,000.00 | 8,500.00 | 2,000.00 | 41,000.00 |
| கடை இல - 07 | 308 | 2,040,000.00 | 8,500.00 | 2,000.00 | 41,000.00 |

**நிபந்தனைகள்:-**

1. விண்ணப்பதாரி வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கிராம சேவகரால் உறுதிப்படுத்திய கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி. இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை தனித்தனி கடித உறையில் இட்டு **"செயலாளர் வலிகாமம் தெற்கு பிரதேச சபை. சுன்னாகம்"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு மூலப்பிரதி. இணைப்பிரதி எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
4. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். குறித்த மாத வாடகை பணத்தினை ஒவ்வொரு மாதம் 31ம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதக்கட்டணத்தின் 10 வீதம் தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.
5. கேள்விச்சித்திகரராக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் 10.01.2025ம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைந்த கட்டுப்பணம் முழுத்தொகையையும் ஒரேதடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேசசபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம்/ தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
6. சித்தி பெறும் கேள்விதாரர் சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருட்களையோ அல்லது பிரதேசசபையால் அங்கீகரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோடு மதுபானவகைகளோ. போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்தபொருள்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன். கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
7. சித்திகர குத்தகைகாரர் வலிகாமம் தெற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
8. சித்திகர குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகை தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.
9. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிம சான்றிதழையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
10. கேள்விப்பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமதி சா. உருத்திரசம்பவன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

(CR/43842) N-1



# ஆறுமுகநாவலர் நினைவுதினம்

வவுனியா,டிசெ.7

முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் மற்றும் வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் ஆறுமுகநாவலரின் 145 ஆவது நினைவு தினம் வவுனியாவில் அண்மையில் இடம்பெற்றது. நகரசபைச் செயலாளர் அ.பாலகிருபன் தலைமையில் வவுனியா இலுப்பையடிப் பகுதியில் அமைந்துள்ள நாவலரது நினைவுச் சிலையடியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது ஆறுமுகநாவலரின் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன், மலர்தூவி அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (ச-33-110)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், டிசெ. 7

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் அமரர் விமலேந்திரன் கவிதனின் 8 ஆவது ஆண்டு நினைவாக குருதிக் கொடை முகாம் நிகழ்வு, சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழக மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப.1 மணி வரை இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் குருதிக்கொடையாளர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு உயிர் காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-25-66)

# டிஜிற்றல் துறையின் அமைச்சராக அநுர

யாழ்ப்பாணம்,டிசெ.7

டிஜிற்றல் பொருளாதார அலுவல்கள் அமைச்சராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடமைகளை நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றுள்ளார்.

அரசியல் அதிகாரத்தினதும் டிஜிற்றல் தொழில்நுட்ப நிபுணர்களினதும் எதிர்பார்ப்புகள் ஒன்றாக இருக்கும் நிலையில், நாட்டை டிஜிற்றல் மயமாக்கும் செயற்பாட்டுக்கு அனைத்து தொழில் வல்லுநர்களினதும் ஆதரவையும் எதிர்பார்ப்பதாக இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் கந்தன் திருமண சேவை

எம் திருமண சேவையில் உள்நாட்டு மணமக்கள், வெளிநாட்டு மணமக்கள் உத்தியோகம், உத்தியோகம் இல்லாதது வெளிநாட்டு மணமகள்கள் கைவசம் உள்ளனர். எவ்விதமாயினும் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு: 077 973 3183





## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சுப்பர் மார்க்கற் மற்றும் பலசரக்கு கடைக்கு வேலையாட்கள் தேவை

- Sales Assistant (உதவியாளர்)
- Computer billing Cashier
- Driver (சாரதி)
- Part time (பகுதிநேர வேலை)

வயது எல்லை 18-45 யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 419 5209, 077 419 5015

(CS 1989) V-1

## நயினை அம்மன் திருமண சேவை

சகல சமூகத்தினருக்குமான விரைவான உள்நாட்டு, வெளிநாட்டு திருமண சேவை

G.P.S வீதி கல்வியங்காடு

பதிவுக்கட்டணம் இலவசம்

076 050 3863

Whatsapp: 076 311 9485


# ஒளி விழா

யாழ்ப்பாணம், டிசெ.7

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கிறிஸ்தவ மன்றம் நடத்திய ஒளி விழா கலாசாலை முதல்வர் ச.லலீசன் தலைமையில் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ பாட விரிவுரையாளர் அ.ஜேம்ஸ் மெய்ஷான், யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நடுவுநிலைய இயக்குநர் அருட்பணி டியூக் வின்சென்ட் அடிகளார், கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் வ.சி.குணசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-45-66-20)


# புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு.

## புதுக்குடியிருப்பு கடைகள் மற்றும் திருமுறிகண்டி கடைகளுக்கான நீண்டகால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2024

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான 03 கடைகள் மற்றும் திருமுறிகண்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 05 கடைகள் என்பன நீண்டகால குத்தகையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் வழங்கும் காலம் :- 09.12.2024 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 19.12.2024. பிற்பகல் 01.00 மணி வரை (அலுவலக நாட்களில் மட்டும்)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி :- 20.12.2024 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணி வரை

கேள்விபத்திரம் திறக்கப்படும் திகதி :- 20.12.2024 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணி

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- புதுக்குடியிருப்பு பிரதேசசபை, தலைமை அலுவலகம்

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|
| **புதுக்குடியிருப்பு கடைகள்** | | | |
| கடை இல 01 | ரூபா. 3,360,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 02 | ரூபா. 3,840,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 03 | ரூபா. 9,600,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| **திருமுறிகண்டி கடைகள்** | | | |
| கடை இல 01 | ரூபா. 3,600,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 02 | ரூபா. 3,600,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 03 | ரூபா. 3,600,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 04 | ரூபா. 3,600,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 05 | ரூபா. 3,600,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 2,000.00 |

நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருப்பதுடன் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஏதேனும் ஓர் ஆவணத்தின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளும் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு. என முகவரியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் புதுக்குடியிருப்பு கடை இல ..... திருமுறிகண்டி கடை இல .... என கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 20.12.2024 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப்பெறல் வேண்டும். கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் (கறுப்புப்பட்டியல்) கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்படமாட்டாது.
5. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
6. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் ஒரே தடவையில் கேள்வித் தொகையின் முழுத்தொகையையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ள வேண்டும்.
7. சித்திகரக் குத்தகைக்காரர் வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் கடைக்கான மாதாந்த வாடகையை செலுத்துதல் வேண்டும்.
8. முற்குறிப்பிட்ட நிபந்தனையின் பிரகாரம் நடக்க தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச் செய்யப்படாது என்பதுடன், அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
9. சபையின் அனுமதியின்றி எதுவித திருத்த வேலைகள், மாற்றங்கள், புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
10. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
11. சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாக செயலாளரிற்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கமுடியாது.
12. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
பிராந்தியபெறுகைக் குழு,
புதுக்குடியிருப்பு பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு.
2024.12.07
தொலைபேசி இல:-0212291023 email- pkipsmullai@gmail.com


# ஆடை வடிவமைப்பு விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, டிசெ. 7

தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்தி அலகினர் மற்றும் மனைப்பொருளியல் டிப்ளோமா நிறுவனம் ஆகியன இணைந்து நடத்தவுள்ள ஆடை வடிவமைப்பு முறைமை பயிற்சிநெறிக்கு பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களிமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பயிற்சிகள் ஜனவரி முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளன. பயிற்சிநெறியில் பங்குபற்ற விரும்புவோர் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்ட சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவத்தில் இலங்கை வங்கி கணக்கு இலக்கம் குறிப்பிட்ட பிரதியையும் இணைத்து பிரதேச கிராம அபிவிருத்தி அலகில் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25-9)

# பாவற்குளத்திலிருந்து காலபோகத்துக்கு நீர்

வவுனியா,டிசெ.7

பெரும்போக நெற்செய்கைக்காக வடமாகாணத்தில் உள்ள பெரிய குளங்களில் ஒன்றான வவுனியா பாவற்குளத்திலிருந்து நேற்றுமுன்தினம்வியாழக்கிழமை நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டச்செயலாளர் பி.ஏ.சரத்சந்ர தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

27 ஆயிரம் ஏக்கர் அடி கொள்ளளவு கொண்ட பாவற்குளத்தின் கீழ் 4 ஆயிரத்து 600 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-33-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
24
.
12
.
1952



மறைவு
05
.
12
.
2024

## செல்லத்துரை தங்கராசா

யாழ் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தங்கராசா அவர்கள் நேற்று முன்தினம் (05.12.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் பாலசிங்கம்-தவமணி தம்பதியரின் ஆசை மருமகனும் விமலராணியின் பாசமிகு கணவரும் தனுஷா (Magicktech Solutions (Pvt) Ltd, Jaffna), தர்ஷிகா (London), ஜீரோஷன் (Printer, Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதீபன் (ஸ்ரீஅம்பாள் ஸ்ரோர்ஸ், சங்கானை), கபிலன் (London), சகுந்தலா (Colombo) ஆகியோரின் மாமனாரும் பரிமளகாந்தி (நெதர்லாந்து), காலஞ்சென்ற விமலராசா, ஜெயராசா (நெதர்லாந்து), புஸ்பகாந்தி (நெதர்லாந்து), லோகராசா (நெதர்லாந்து), ஜெயகாந்தி (நெதர்லாந்து) ஆகியோரின் அண்ணாவும் பராரசிங்கம் (நெதர்லாந்து), காலஞ்சென்ற ஞானேஸ்வரி, கந்தவேள் (நெதர்லாந்து), புஸ்பராணி (நெதர்லாந்து), பானுமதி (நெதர்லாந்து), காலஞ்சென்ற பாலசந்திரன் ஆகியோரின் மைத்துனரும் சத்தியபாலதேவி-ஞானப்பிரகாசம் (Colombo), தேவராணி-நாகேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற சுகிர்தராணி, பிறேமராணி (Colombo), மாலினிதேவி-ராஜேந்திரன் (London), தவபாலலிங்கம்-வசந்தமலர் (London), பாலகுமார்-கயிலினி (London), சதீஸ்குமார்-வனிதா (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். ரிஸ்மிஜா, மகணிஜா, சாகித்தியா,சாருகா, திவ்யன், கிஸ்மிதா ஆகியோரின் பேரனும் கஜானி, ஜெனகரன், கபிஷா, கபிஷன், மதுஷா, சாறுஷன் ஆகியோரின் பெரிய மாமனாரும் டிலானி, டினுஷா, கலெஷ்சனா, புவிதரன், காலஞ்சென்ற அபிதரன், அஞ்சலி, அனுஷன், ஆருஷன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காக்கதீவு கரையான் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஜீரோஷன் (மகன்)-077 581 8758
ஜெகதீபன் (மருமகன்)- 077 949 1053

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 1990) P-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
24
.
01
.
1953



மறைவு
03
.
12
.
2024

## மனோன்மணி ஆனந்தகுமாரதாஸ்

சுன்னாகம் தெற்கு, கதிரமலை வீதியை, பிறப்பிடமாகவும் அதே இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி ஆனந்தகுமாரதாஸ் அவர்கள் 03.12.2024 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா-அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா-மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், ஆனந்தகுமாரதாஸ் அவர்களின் அன்பு மனைவியும் ஜெயானி, ஜெயறூபன், சித்பவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் விவேகானந்தசிவம், தர்சிகா, பாலஸயந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுந்தரலிங்கம், ஆனந்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அரியமலர் மற்றும் ஆனந்தகதிரமலை, ஆனந்தபாமதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அபிஷா, அக்ஷயா, அர்த்திஷா, லஷாங்கி, சாத்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2024) ஞயிற்றுக்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல-31/5,
கதிரமலை வீதி,
(இலங்கை வங்கி முன்பாக)
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 666 9512**

(CS 1978) P-1

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
29
.
10
.
1935



மறைவு
07
.
11
.
2024

**கடந்த 07.11.2024 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தின் அன்பு உறவு**

## செல்வி தங்கலட்சுமி செல்லத்துரை

**(ஓய்வு பெற்ற யாழ் இந்துக்கல்லூரி சங்கீத ஆசிரியர்)**

**திதி : ஐப்பசி வளர்பிறை ஷஷ்டி**

அவர்களின் **31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்** இன்று (07.12.2024) சனிக்கிழமை **திவ்ய ஜீவன மண்டபம் (சட்டநாதர் சிவன் கோயில் அருகில்) பருத்தித்துறை வீதி, நல்லூரில்** நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**48/7 பழம் வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**
**077 917 2071**

(CS/56846) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
24
.
01
.
1939



மறைவு
04
.
12
.
2024

## இராசலிங்கம் சரஸ்வதி (கண்ணம்மா)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் சரஸ்வதி (கண்ணம்மா) கடந்த (04.12.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-சின்னம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா-செல்லமுத்து தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற இராசலிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் கருணாகரன் (கனடா), சிவகுமார் (நல்லூர் ப.நோ.கூ.சங்கம்), ஜெயகுமார் (கனடா), ஜெயக்குமாரி (லண்டன்), செந்தில்குமார் (கனடா), கருணாவதி, சிவாஜினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவசோதி, சுபாசினி (கனடா), சுபாஜினி (கனடா), ராஜ்குமார் (லண்டன்), சுபாஜினி (கனடா), முருகதாஸ், சிவகுமாரன் (சாரங்கா நகைமாடம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான குணபாலசிங்கம், கனகலிங்கம் மற்றும் அன்னலட்சுமி (கனடா), தில்லையம்பலம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தனுஷன், நிரோஷன் (கனடா), தனுஷியா, சஹானா (கனடா), ஆதவன் (கனடா), ஆதித்தன் (கனடா), அக்ஷயன் (கனடா), சானுஜா (கனடா), சஞ்சயன் (கனடா), சிவானுஜா (கனடா), விதுஷா (லண்டன்), வினிஷா (லண்டன்), வர்ஷினி (கனடா), கஷிகா, கவிப்பிரியா, மதுஷி, சரன்ஜினி, தருணிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் கல்வியங்காட்டிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**புலவனார் வீதி,**
**கல்வியங்காடு.**


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 1983) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைகளைத் திருடிய சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 7



நகைகளைத் திருடி வீதியில் கொட்டப்பட்ட குப்பையினுள் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் சுன்னாகம் பொலிஸார் இருவரை கைது செய்துள்ளனர்.

மயிலங்காடு ஏழாலைப் பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த வியாழக்கிழமை கூரை வழியாக இறங்கிய திருடன் தாலி, மூக்குத்தி, தோடு ஆகிய தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளான்.

இந்தத் திருட்டு தொடர்பாக அன்றைய தினம் வீட்டின் உரிமையாளரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் 20 வயதுடைய சந்தேகநபரை கைதுசெய்ததுடன் நகையும் மீட்கப்பட்டது. அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் மற்றொருவர் கைதுசெய்யப்பட்ட நிலையில் அவர் வீட்டு உரிமையாளரின் உறவினர் என்பதும் அவரின் உதவியுடனேயே திருட்டு இடம்பெற்றுள்ளமையும் தெரியவந்துள்ளது.சந்தேக நபர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-125-27)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை சமூகமயப்படுத்த அரசு முயற்சி

## மக்கள் போராட்ட முன்னணி சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.7

**தற்போதைய அரசாங்கம் மிகக் குறுகிய காலத்துக்குள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி மக்களைக் கைதுசெய்தும் தடுத்து வைத்தும் அடக்குமுறைக்கு உள்ளாக்குகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை படிப்படியாக நடைமுறைப்படுத்தி சமூகத்தில் சாதாரண விடயமாக அதனை மாற்றுவது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று மக்கள் போராட்ட முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.**

இதுதொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பயங்கரவாதத் தடைச் சட்டம் தற்காலிக ஏற்பாட்டுச் சட்டமாக ஆறு மாத காலத்துக்குள் நீக்கப்படும் எனத் தெரிவித்தே நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் நடைமுறை பெரும் இனப்படுகொலைகளுக்கு இட்டுச் சென்றது என்பதையும் நினைவிற் கொள்ளவேண்டும். தொழில்நுட்ப ரீதியாக நீதித்துறை மேற்பார்வையின்றி நிறைவேற்று அதிகாரத்தின் எதேச்சதிகார விருப்பப்படி தனிநபர் சுதந்திரத்தை கட்டுப்படுத்த இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது.

இந்த அரசாங்கம் இனவாதத்தைத் தூண்டும் முயற்சி தோற்கடிக்கப்படும் எனக் கூறுகின்ற போதிலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை படிப்படியாக நடைமுறைப்படுத்துவதனூடாக சமூகத்தில் சாதாரண விடயமாக அதை மாற்றுவது முற்றிலும் ஏற்றுக் கொள்ளமுடியாதது. எனவே நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தச் சட்டத்தை விரைவில் ரத்துச் செய்யவேண்டும். அரசின் இந்த அடக்குமுறையை தோற்கடிக்க வேண்டிய பொறுப்பு மக்களுக்குண்டு - என்றுள்ளது. (ச-இ)

# மடத்தடி வீதியில் குப்பைகள் வீசல்

## மக்கள் அசௌகரியம்!

யாழ்ப்பாணம், டிசெ.7

மானிப்பாய் மடத்தடி வீதியில் சிலர் தமது வீட்டுக் கழிவுகளையும் விலங்குக் கழிவுகளையும் வீதியிலே வீசிச் செல்கின்றனர். இதனால் வீதியில் பயணிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதிகளில் வீசப்படும் கழிவுகளால் வீதிக்கருகே வசிப்போர் தொற்று நோய்களுக்குள்ளாகவும் நேரிடுகிறது.

பிளாஸ்ரிக் மற்றும் தகரப் பேணிகளில் நீர் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்பு பெருகி டெங்கு நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இந்த வீதியிலுள்ள மின் விளக்குகளும் ஒளிர்வதில்லை. எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயங்கள் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-33-27)

மணிவிழா வாழ்த்துக்கள்




ஆசிரியர் சேவையில் 11.01.1993 முதல் 31 வருடங்கள்
அளப்பரிய சேவையாற்றி இன்று (07.12.2024) சனிக்கிழமை
தனது அறுபதாவது வயதில் மணிவிழா காணும்
எமது ஆசிரியை
செல்வி நவரத்தினம் பேரின்பகௌரி
(இலங்கை ஆசிரியர் சேவை தரம் - 1)
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில்
பெருமகிழ்வடைகின்றோம்.
அன்பும் பண்பும் அகத்தினில் நிறைந்த
இன்முகம் கொண்ட இனிய ஆசான்
தன்னலம் கருதா தகைமை பல கொண்ட
நன்னலம் பெற்ற நங்கை நலமோடு வாழ்க.
வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்,
யா/ மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்
(cr.43831) (4 x20)

## லொஹான்...

மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய குற்றத்துக்காகவே அவர் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர் நேற்றுமுன்தினம்தான் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## 30 மில்லிமீற்றர்...

களுக்கும் எதிர்வரும் 10ஆம் திகதி இரவு முதல் 15ஆம் திகதி வரை மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. சில இடங்களில் மிகக் கன மழைக்கும் வாய்ப்புள்ளது.

தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மண்ணீரக் கொள்ளளவில் 97 வீதம் பூர்த்தியாகியுள்ளது. கடந்த 28ஆம் திகதி 100 வீதமாகவிருந்த இந்நிலைமை கடந்த சில நாள்களாக இருந்த வெப்பநிலையின் காரணமாக ஆவியாக்கத்தின் விளைவாக தற்போது 97 வீதமாக உள்ளது. ஆகவே, சராசரியாக 30 மில்லிமீற்றர் மழை கிடைத்தால் இது மீண்டும் 100 வீதத்தை அடைந்துவிடும். ஆகவே, அதன் பின்னர் கிடைக்கும் மழை தரை மேற்பரப்பில் தேங்கி மீண்டும் தாழ்வான பகுதிகளில் வெள்ள இடர் ஏற்படலாம். அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் குளங்களும் அவற்றின் முழுக் கொள்ளளவை எட்டியுள்ளதால் அவை சற்றுக் கனமழை (30 மில்லிமீற்றர் முதல் 50 மில்லிமீற்றர் வரை) கிடைத்தாலே மீண்டும் வான்பாயத் தொடங்கும் - என்றார். (அ-ம)

## சிறுவர்களை...

வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் மருத்துவர் ஹசங்க விஜயமுனி மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-இ)

## இலங்கையை...


இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள டொனால்ட் லூ, பிரதமர் ஹரிணியை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதன்போதே, இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேம்படுத்துதல், இலங்கையின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துதல், கல்வி மற்றும் நிர்வாக ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய்தல் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டதாக பிரதமரின் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இலங்கையில் சர்வதேச நாணய நிதியம் மேற்கொள்ளும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டதாக பிரதமரின் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

தோற்றம் 08 . 06 . 1950



மறைவு 06 . 12 . 2024

## செல்லத்துரை கைலாசதுரை

கொக்குவிலை பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கைலாசதுரை நேற்று (06.12.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-பொன்னம்மா தம்பதியரின் மகனும் நாகேந்திரம்-இராசலட்சுமி தம்பதியரின் மருமகனும் சந்தானலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், இராசதுரை, திருநாவுக்கரசு, ருக்குமணிதேவி ஆகியோரின் சகோதரனும் கிருபாகரன் (சுவிஸ்), அமுதகரன், ஸ்ரீகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், திருகோணமலை), ரமணகரன் (முகாமைத்துவ உதவியாளர் யாழ் பல்கலைகழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுஜீவா (சுவிஸ்), ஸ்ரீரஞ்சினி, துஸ்யந்தி, சரண்யா ஆகியோரின் மாமனாரும் அபிராம், அஸ்வத், ஆதர்ஸ், அபினாஷ், ஜஸ்வதி, மனுருத்திரன், வைஸ்ணவி, லவருத்திரன், ஆத்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பூநாறி மரத்தடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**1070, பூநாறி மரத்தடி,**
**கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**075 322 0279**

(CS 1996) P-1

# மரண அறிவித்தல்



## அமரர் மாரிமுத்து வேலாயுதம்

யாழ்ப்பாணம் பன்னாலையை பிறப்பிடமாகவும், கொழும்பை பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து வேலாயுதம் (Anuja Stores முதலாளி கொம்பெனித் தெரு மலே வீதி கொழும்பு) அவர்கள் கடந்த (04.12.2024) புதன்கிழமை இரவு கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்துது சிவபாதம் மற்றும் மாரிமுத்து சுப்பிரமணியம் நாகேஸ்வரன், அவர்களின் சகோதரரும், பாசமிகு காமாச்சிப்பிள்ளையின் கணவரும் மகேஸ்வரியின் மருமகனும், சஜீவன் மற்றும் டேவிதாவின் அன்பு அப்பாவும் கரோலினின் மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் (08.12.2024) ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணியளவில் சேமக்காலை தாவடி யாழ்ப்பாணத்தில் அடக்க ஆராதனை செய்யப்பட்டு பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 420 0424**

# அமைச்சர் விஜிதவுடன் அமெ.செயலர் சந்திப்பு

தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர் டொனால்ட் லூ, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, இலங்கையின் புதிய அரசாங்கத்திற்கு வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன் பொதுவான பிரதான விடயங்கள் பற்றிச் கலந்துரையாடப்பட்டன. மேலும், இலங்கையின் மக்கள் நலனுக்காக பொருளாதார மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களை ஆதரிக்கத் தகுந்த திட்டங்கள், திறன் வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் மூலம் இணைந்து செயற்படக்கூடிய வழிகள் குறித்தும் ஆராயப்பட்டன. (ச-இ)



இலங்கைப் பார்வையற்றோருக்கான அறக்கட்டளையின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ச-33-66)

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 09 . 1936



மறைவு 06 . 12 . 2024

## சின்னத்துரை தங்கம்மா

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தங்கம்மா நேற்று (06.12.2024) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னப்பிள்ளை தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் இராசலட்சுமி (கனடா), லோகேஸ்வரன் (தேவிபுரம்), விஜயலட்சுமி (சத்திய ஞான கோட்டம், வேம்பிராய்), தனலட்சுமி (சுவிஸ்), ஈஸ்வரன் (ஈசன் களஞ்சியம், சாவகச்சேரி), கேதீஸ்வரன் (மடத்தடி, மீசாலை), மகாலட்சுமி (ஜேர்மனி), அன்னலட்சுமி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் குகனேசன் (கனடா), காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் கேதீஸ்வரன் (சத்திய ஞான கோட்டம், வேம்பிராய்).விஜயதாசன் (சுவிஸ்), யோகேஸ்வரி, காலஞ்சென்ற மதனி, கணேசலிங்கம் (ஜேர்மனி), ஜீவரட்ணம் (வரதன்-சுவிஸ்), ஆகியோரின் மாமியாரும் டினேஸ், தாட்சாயினி, சிந்துயன், கோபிசன், தர்மிலன், டில்சன், டிசாந்தன், கீர்த்திகா, தர்சிகா, கார்த்திகா, தயானந்தன், திவானா, விதுனா, கபினன், தயாநந்தினி, தளிரினி, கயானன், ஹரிஷ், ஹரிணி, விபூசனா, பிரவீன் ஆகியோரின் பேர்த்தியாரும் லதுஷா, தனுசிகன், லிந்துசன், ரட்சயன், லோஜிதா, ஆதிரா, கேசிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கல்வயல்,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
மகன்- ஈஸ்வரன் (ஈசன் களஞ்சியம்)
077 306 8974

(CS 1988) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியலமைப்புக்...

மன்ற உறுப்பினரான சிவஞானம் சிறீதரனை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் முன்மொழிய, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதனை வரவேற்று வழிமொழிந்ததுடன், சிறீதரனது நியமனத்தின் தேவைப்பாட்டையும் வலியுறுத்தியிருந்தார். சமநேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமானை ரவி கருணாநாயக்க வழிமொழிந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தன்னைத் தானே பிரேரித்ததுடன், பின்னர் பின்வாங்கினார். அதற்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோருக்கிடையே வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. வாக்கெடுப்பின் அடிப்படையில் 11:10 என்ற அடிப்படையில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் சிறீதரன் வெற்றிபெற்றார்.

இதேவேளை, அரசமைப்புப்பேரவைக்கு எதிர்க்கட்சி தலைவரின் பிரதிநிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமரின் பிரதிநிதியாக ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம் பாவா பரிந்துரைக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியின் பிரதிநிதி இன்னும் நியமிக்கப்படவில்லை. சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மூவரும் இன்னும் பெயரிடப்படவில்லை. (அ-ம-18-44)

## அரசாங்கம்...

சில்வா தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே ஹர்ஷ டி சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- 2024ஆம் ஆண்டு 44ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் 2025ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதிக்கு இடைக்கால கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் செயற்றிட்ட முன்மொழிவுகளுக்கு அமைய 2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்குக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடனத்தில் 'சர்வதேச நாணய நிதியத்தின் செயற்றிட்டத்தில் இருந்து விலகினால் பாரதூரமான நெருக்கடிகளை எதிர்க்கொள்ள நேரிடும்' என்று எச்சரித்துள்ளார். இதுவே உண்மை. இதனையே நாங்களும் ஆரம்பத்திலிருந்து குறிப்பிட்டோம்.

சர்வதேச நாணய நிதியத்தை தவிர்த்து விட்டுச் செயற்பட முடியாது. இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருசில நிபந்தனைகள் மீள்பரிசீலிக்கப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தினோம். தேசிய மக்கள் சக்தி தேர்தல் மேடைகளில் ஒன்றைக் குறிப்பிட்டு விட்டு தற்போது நாடாளுமன்றத்துக்குப் பிறிதொன்றைச் சமர்ப்பித்துள்ளது.

சர்வதேச பிணைமுறியாளர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆகவே இனி ஏதும் செய்ய முடியாது என்று ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை. முடிந்தால் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பியுங்கள் என்று சவால் விடுக்கிறேன். நாட்டு மக்களிடம் உண்மையைச் சொல்லுங்கள்.

75 ஆண்டுகால அரசியலில் நாட்டுக்கு ஏதும் நன்மை கிடைக்கவில்லை என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவர்கள் குறிப்பிடுவதை போன்று ஏதும் நடக்கவில்லை என்றால் எந்தத் துறையிலும் நாடு முன்னேற்றமடைந்திருக்காது. அரசாங்கம் மக்களை ஏமாற்றியுள்ளது. ஏமாற்றமடைந்ததை மக்களும் விளங்கிக் கொள்ளவேண்டும் - என்றார். (அ-ம-இ)

## இடைக்கால...

நவம்பர் மாதம் பிற்பகுதியிலேயே ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்தது. எனவே, அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தை முன்வைப்பதற்குப் போதிய அவகாசம் இல்லாத காரணத்தால், முதல் நான்கு மாதங்களுக்கான செலவீனங்களைப் பராமரிப்பதற்காக இடைக்காலக் கணக்கறிக்கை தயாரிக்கப்பட்டது.

இந்தக் கணக்கறிக்கை நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடத்தப்பட்டது. இதைத்தொடர்ந்தே நேற்றுமாலை வாக்கெடுப்பின்றி இடைக்காலக் கணக்கறிக்கை நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வாக்கெடுப்புக்கு நேரம் குறிப்பிடப்பட்டிருந்தாலும், எதிரணிகள் வாக்கெடுப்பைக் கோராத காரணத்தாலேயே கணக்கறிக்கை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## கோபா...

எரான் விக்கிரமரத்னவை தேசியப் பட்டியல் ஊடாக சபைக்கு கொண்டுவந்து, அவரை கோபா தலைவராக்குவதற்குரிய பரிசீலனைகளும் இடம்பெறுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்கும், ஹர்ஷ டி சில்வாவுக்கும் இடையில் மனக் கசப்புகள் ஏற்பட்டுள்ளதாக அண்மைக்காலமாகத் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## மீன்பிடித்த...

பகுதியைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வான் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அவர் நீருக்குள் தவறி விழுந்ததை அவதானித்தவர்கள், ஊர் மக்களுக்குத் தகவல் வழங்கி தேடுதலைத் துரிதப்படுத்தியிருந்தனர். சுமார் ஒரு மணிநேரத் தேடுதலின் பின்னர் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-110)

## யாழில்...

12 மணியுடன் நிறைவுக்கு வந்த நிலையிலேயே, உதயன் வினவியபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெற்ற ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தலில், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இருந்து 23 அரசியல் கட்சிகளும், 21சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டன. இரண்டிலுமாகச் சேர்த்து 396 வேட்பாளர்கள் களமிறங்கியிருந்தனர்.

தேர்தல் முடிவடைந்த பின்னர் வேட்பாளர்கள் தமது கணக்கறிக்கையைத் தாக்கல் செய்யவேண்டும் என்பது இம்முறை கட்டாய சட்டமாக்கப்பட்டிருந்தது. அரசியல் கட்சிகள், சுயேச்சைகள் என ஒட்டுமொத்தமாக 44 தரப்புகளில் 36 தரப்புகளைச் சேர்ந்த வேட்பாளர்களில் 354 வேட்பாளர்கள் தமது தேர்தல் கணக்கறிக்கையைத் தாக்கல் செய்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-26)

## கொக்குவில்...

வேந்தல் தொடர்பாகவே இரண்டு இளைஞர்களிடம் விசாரணை நடத்தப்பட்டதுடன் வாக்குமூலமும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (அ-ம-125)

## வங்காள...

வரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

வங்காள விரிகுடாவில் நாளை (இன்று) காற்றுச் சுழற்சி உருவாகின்றமை உறுதியாகியுள்ளது. இது எதிர்வரும் 10ஆம் திகதி இரவு ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வு நிலையாக வலுவடையச் சாத்தியங்கள் உள்ளன.

தற்போதைய நிலையில் இது கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களின் கரையோரப் பகுதிகளிலிருந்து சற்றுத் தொலைவாகவே கடற்பகுதியில் வடக்கு, வடமேற்கு திசையில் நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இதன் நகர்வுத் திசை மற்றும் வேகம் அதற்கு கிடைக்கும் மறைவெப்பச் சக்தியைப் பொறுத்து மாற்றமடையலாம். இன்று முதல் வடக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கு கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது சிறந்தது.

அதேவேளை எதிர்வரும் 19ஆம் திகதி வங்காள விரிகுடாவில் மீண்டும் ஒரு தாழமுக்கம் உருவாகும் வாய்ப்புள்ளது. அது தொடர்பான மேலதிக விபரங்களை எதிர்வரும் 14ஆம் திகதிக்குப் பின்னரே உறுதிப்படுத்தமுடியும் - என்றார். (அ-ம-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக் கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**இடபம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**கடகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்படும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது. பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்க வேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். முடிந்தவரை அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும்.

**துலாம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** உற்சாகமான நாளாக அமையும். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள்.

**மகரம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். இளைய சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்குத் தேவை

- 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை
- Tution நிறுவனம் ஒன்றிற்கு காணி / வீடு வாடகைக்குத்தேவை.

(cs.56837) (N-1)

**076 549 0913**

## Win Repair

உங்கள் குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்துவிட்டதா? கவலையை விடுங்கள். உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்தித் தருகிறோம். (நத்தார் பண்டிகையை முன்னிட்டு சிறந்த விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

(CS/1984) J-1

தொடர்புகளுக்கு:- **076 834 6136**



விரைவு - நம்பிக்கை - பாதுகாப்பு

## அண்ணா பொதிகள் சேவை

குறைந்த கட்டணம்
நம்பிக்கையான சேவை

SPECIAL OFFER

யாழ்ப்பாணம் - சங்கானை
நெல்லியடி - கைதடி
கிளிநொச்சி - வவுனியா

**075 330 5500 | 076 122 1566**

கே.கே.எஸ். வீதி, நாச்சியார் கோவிலடி, யாழ்ப்பாணம்

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

### நிலப்பரப்பு

▲ 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
▲ 2 ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
▲ 2 பரப்புள்ள துண்டு ஒன்றுக்குள் 6 தொடக்கம் 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
▲ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
▲ அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

▲ நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
▲ கடற்கரையை (**Beach**) முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
▲ 20 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் **9,75000** ரூபாய் மட்டுமே
▲ தரகர் தேவையில்லை
▲ பார்வையிடும் நேரம்: -
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

**தொடர்பு: ஜெயம்**
**077 814 7389**
**077 986 5457**

(cs.11944) (N-1)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பான்சி கடை ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
மாதாந்த சம்பளம் - 35000/-
மதிய உணவிற்கு 300 ரூபா வழங்கப்படும்.
Light vehicle வாகனம் ஓடுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(CS/56844) J-1

**075 225 1078**

## வேலை வாய்ப்பு

இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனம் ஒன்றிற்கு யாழ்ப்பாணத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

➤ **வணிக நிர்வாகிகள்** (Busines Executive)
- வயதெல்லை - 20 - 45
- கல்வித்தகைமை - கா.பொ.த.சாதாரணம் (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

வாடிக்கையாளருடன் சிறந்த தொடர்பாடல் திறன் மற்றும் வாடிக்கையாளர் சேவை

➤ **அணி முகாமையாளர்கள்** (Team Manager)
- வயதெல்லை - 20 - 45
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
- காப்புறுதி / சந்தைப்படுத்தல் துறையில் முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது

மேற்குறித்த பதவிகளுக்கு விண்ணபிக்க விரும்புவோர் உங்கள் சுயவிபரக் கோவையினை (CV) கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது Whatsapp இலக்கத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

arun2016s.a@gmail.com
Whatsapp No. 076 550 5550 - S.Arun

(cs.56843) (N-1)

## மருத்துவ முகாம்!

கண்ணாபுர ஞானவைரவர் ஆலய மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 மணிளவில் மருத்துவ முகாமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட கண்ணாபுர மக்களுக்கு, வெள்ளப் பேரிடரால் ஏற்படக்கூடிய நோய்கள் தொடர்பிலும், அவற்றைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலும் போதிய அறிவுறுத்தல்களை வழங்கும் வகையில் ஆயுள்வேத பாதுகாப்புச் சபையினரால் இந்த மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-22)

# மரண அறிவித்தல்

# கணேசன் பரமேஸ்வரி



தோற்றம் 12.06.1937 மறைவு 05.12.2024

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் காரைநகர் ஆயிலியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட கணேசன் பரமேஸ்வரி நேற்றுமுன்தினம் (05.12.2024) வியாழக்கிழமை காரைநகர் ஆயிலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணேசன் (ஸ்ரீகணேசா ஸ்ரோர்ஸ் பசறை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி, பத்மநாதன் (உரிமையாளர் ஸ்ரீகணேசா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), யோகநாதன் (உரிமையாளர் ஸ்ரீகணேசா ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி), சற்குணேஸ்வரி, விக்கினேஸ்வரன் (ஓய்வுநிலை ஆசிரியர், பசறை தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), செல்வராஜா (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற கற்பகராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவனாந்தராஜா (ஓய்வுநிலை கோட்டக் கல்விப்பணிப்பாளர், வேலணை), சிவபாக்கியம், சித்திரா, புண்ணியமூர்த்தி (ஓய்வுநிலை அதிபர், பண்ணாகம் வடக்கு அ.மி.த.க.பா.) அனுசா, மகாலட்சுமி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், சிவபிருந்தன், சிவவதனி (UK), சிவறுக்சி (கனடா), சிவதாட்சாயினி, சானுகா, சியாந்தினி (மக்கள் வங்கி - மோதரா), சியாந்தன் (உரிமையாளர், ஸ்ரீகணேசா ஸ்ரோர்ஸ் - கிளிநொச்சி), சியாமினி (கணக்காளர் - (UK), திவ்யா (I.T.I - கொழும்பு), சரண்யா (நிதி உதவியாளர், நொதேண் வைத்தியசாலை), நிரோசன் (இயந்திரவியல் பொறியியலாளர் - UK), நிருஜன் (தர நிர்ணய கட்டுப்பாட்டாளர், NAVESTA, கொழும்பு), கோகுல் (அவுஸ்திரேலியா), ராகுல் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விமிதா (UK), விவிசன் (UK), சந்தோஸ்வர, அதிரேஸ்வர ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (08.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகட்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் இல. 361 இலுள்ள அச்சகத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.